CBSETAMIL

**Series JBB** **SET-4**

**Code No. 10**

Roll No. | | | | | | | | |

Candidates must write the Code on the title page of the answer-book.

| | குறிப்பு | | NOTE |
|---|---|---|---|
| (I) | இந்த வினாத்தாளில் அச்சிடப்பெற்ற **23** பக்கங்கள் உள்ளதைச் சரிபார்க்கவும். | (I) | Please check that this question paper contains **23** printed pages. |
| (II) | வினாத்தாளின் வலதுபக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ள குறி எண்ணை (Code No.) விடைத்தாளின் தலைப்புப் பக்கத்தில் எழுதவும். | (II) | Code number given on the right hand side of the question paper should be written on the title page of the answer-book by the candidate. |
| (III) | இந்த வினாத்தாளில் **16** வினாக்கள் உள்ளனவா எனச் சரிபார்க்கவும். | (III) | Please check that this question paper contains **16** questions. |
| (IV) | எழுதத் தொடங்குவதற்கும் முன் விடைத்தாளில் வினாவின் வரிசை எண்ணைக் குறிப்பிடவும். | (IV) | Please write down the Serial Number of the question in the answer-book before attempting it. |
| (V) | வினாத்தாளைப் படிப்பதற்கு 15 நிமிடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. வினாத்தாள் 10.15 க்குக் கொடுக்கப்படும். 10.15 இல் இருந்து 10.30 வரை வினாத்தாளை மட்டும் படிக்க வேண்டும். இந்த நேரத்தில் விடைத்தாளில் எந்தப் பதிலையும் எழுதக்கூடாது. | (V) | 15 minute time has been allotted to read this question paper. The question paper will be distributed at 10.15 a.m. From 10.15 a.m. to 10.30 a.m., the students will read the question paper only and will not write any answer on the answer-book during this period. |

# தமிழ்

# TAMIL

*கால அளவு : 3 மணி* *மொ. மதிப்பெண்கள் : 80*

*Time allowed : 3 hours* *Maximum Marks : 80*


CBSETAMIL | www.cbsetamil.com

**இக்கேள்வித்தாள் நான்கு பிரிவுகளைக் கொண்டது :**

**This question paper is divided into four Sections :**

| | | | |
|---|---|---|---|
| **பிரிவு அ** | **:** | படித்தல் உரைநடைப்பகுதி | *15 மதிப்பெண்கள்* |
| **SECTION A** | **:** | Reading Comprehension | *15 Marks* |
| **பிரிவு ஆ** | **:** | எழுதுதல் | *14 மதிப்பெண்கள்* |
| **SECTION B** | **:** | Writing | *14 Marks* |
| **பிரிவு இ** | **:** | இலக்கணம் | *15 மதிப்பெண்கள்* |
| **SECTION C** | **:** | Grammar | *15 Marks* |
| **பிரிவு ஈ** | **:** | இலக்கியம் | *36 மதிப்பெண்கள்* |
| **SECTION D** | **:** | Literature | *36 Marks* |

## பிரிவு அ

## (படித்தல் உரைநடைப்பகுதி)

## SECTION A

## (Reading Comprehension)

*Marks : 15*

**1.** கீழ்வரும் பகுதியைப் படித்துக் கொடுக்கப்பட்ட பலவுள் தெரிவுசெய் வினாக்களுக்கு ஏற்ற விடை எழுதுக : *1×5=5*

வேட்கையும் விருப்பமும் மனிதனையே, ஏன் உலகினையே ஆட்டிப் படைக்கும் சுழல் காற்று; சூறாவளி. பொருள் வேட்கை, பொன் வேட்கை, மண் வேட்கை பலவற்றையும் பற்றிக் கொண்டு தொல்லை தரும் நச்சரவம். அந்நச்சரவத்திற்கு மேலும் மேலும் பாலூற்றி வளர்ப்பது ஆசை மனமே. அறத்தை அழிக்கத் தொடங்கும் ஆழி, பொருள் எனத் தெரிந்தும் அதனை வெறுக்க முடிவதில்லை. நம்மையும் அழிக்குமென அறிந்தும் நாம்

அதனை விட்டு அகல இயலுவதில்லை. ஆசை மிகுதியாக மிகுதியாகப் பிறர் பொருளைக் கவர வேண்டும் என்ற தீரா எண்ணம், தணியா வேட்கை, மனிதனை எப்படியெல்லாமோ அலைக் கழிக்கிறது.

"ஆசை அறுமின்கள் ஆசை அறுமின்கள் ஈசனோடாயினும் ஆசை அறுமின்கள்" என்பது திருமூலரின் தெய்வத் தாரக மந்திரம், "வேண்டாமையன்ன விழுச் செல்வம் ஈண்டில்லை" என்பது திருக்குறளின் தனிக்குரல். பொருள் உலகை வெறுத்து அருள் உலகை நாடிய அருள்ஞானி, போதி மரத்துப் புத்தர் பிரானின் புனித மொழியும் "ஆசையறுமின்" என்பதே, அவர் "துன்பத்திற்கு மூல காரணம் ஆசையே" என்றார். அறிவின் வழிச் செல்லாது ஆசை வழிச் சென்று அல்லற்படுவது மனித மனம்.

**வினாக்கள் :**

(i) அறத்தை அழிக்கத் தொடங்கும் ஆழி எது ?

(அ) அன்பு மனம்

(ஆ) பக்தி மனம்

(இ) பொருளாசை மனம்

(ஈ) அருள் மனம்

(ii) அரவம் என்பதன் பொருள் ______________ .

(அ) பல்லி

(ஆ) முதலை

(இ) பாம்பு

(ஈ) தேள்

(iii) அருள் உலகை நாடிய ஞானி

(அ) புத்தர்

(ஆ) திருவள்ளுவர்

(இ) திருமூலர்

(ஈ) திருநாவுக்கரசர்

(iv) திருக்குறளில் ஒலித்த தனிக்குரல் எது ?

(அ) ஆசை அறுமின்கள்

(ஆ) துன்பத்தின் மூலம் ஆசையே

(இ) வேண்டாமை போன்ற செல்வம் ஏதுமில்லை

(ஈ) ஈசனோடாயினும் ஆசை அறுமின்

(v) "ஈசனோடாயினும் ஆசை அறுமின்கள்" எனக் கூறியவர் ___________ .

(அ) இராமர்

(ஆ) சுந்தரர்

(இ) திருமூலர்

(ஈ) திருநாவுக்கரசர்

**2.** பின்வரும் பகுதியைப் படித்து கொடுக்கப்பட்ட பலவுள் தெரிவுசெய் வினாக்களுக்கேற்ற விடை எழுதுக : *1×5=5*

சோழன் கரிகாலன் மிகச் சிறந்த வெற்றி வேந்தன். வெண்ணிப்பறந்தலை என்னுமிடத்தில் இவனை எதிர்த்தான் சேரவேந்தன். பெருஞ்சேரலாதன் போர் கடுமையாக நடைபெற்றது. இறுதியில் கரிகாலன் எய்த அம்பு சேரன் மார்பில் ஊடுருவி முதுகு வழியாக வெளிச்சென்று விட்டது. மார்பிலும், முதுகிலும், புண்பட்ட சேரவேந்தன் விழுப்புண் என்பானா ? புறப்புண் என்பானா ? முடிவில் முதுகில் பட்ட புண்ணுக்கு நாணி வடக்கிருந்தான். இதனை நேரில் கண்ட வெண்ணிக்குயத்தியார் கரிகாலனைக் கண்டு சேரனது வீரத்தைப் பாராட்டி "நின் ஆற்றல் தோன்ற வென்றாய், என்றாலும் புறப்புண் நாணி வடக்கிருந்த சேரன் உன்னை விட நல்லன் என பெருஞ்சேரலாதனைப் புகழ்ந்தார்."

கோப்பெருஞ்சோழன் உறையூரைத் தலைநகராகக் கொண்டு அரசாண்ட போது அவனுக்கும் அவன் மக்கட்கும் பகை மூண்டது. சோழன் தன் மக்களை எதிர்த்துப் போராட வஞ்சிசூடி போர்க்கோலம் பூண்டான். இதனை அறிந்தார் எயிற்றியனார் என்னும் புலவர். "வெற்றி வேந்தனே, உன்னோடு போர் செய்வதற்கு எழுந்த நின் புதல்வர் தோற்றாலும் உன் செல்வம் அவர்க்கொழிய வேறுயாவர்க்குக் கொடுப்பாய் ? நீ உன் மக்களிடம்

தோற்றால் உன் பகைவர்க்கு மகிழ்ச்சி பெருகும். உனக்குப் பழி நிலை நிற்கும். ஆதலால் உன் பகைமைக் குணம் நீங்க வேண்டும். நல்வினையைச் செய்வதற்கு விரைந்தெழுக" என்று அவன் உள்ளம் கொள்ளும் வகையில் அறிவுரைக் கூறிப் போரைத் தடுத்தார்.

**வினாக்கள் :**

(i) கரிகாலனுக்கும் சேரனுக்கும் போர் நடைபெற்ற இடம் எது ?

(அ) உறையூர்

(ஆ) சோழநாடு

(இ) சேரநாடு

(ஈ) வெண்ணிப்பறந்தலை

(ii) சேர மன்னனைப் புகழ்ந்து பாடிய புலவர் யார் ?

(அ) எயிற்றியனார்

(ஆ) பிசிராந்தையார்

(இ) வெண்ணிக்குயத்தியார்

(ஈ) கண்ணகனார்

(iii) சேர மன்னன் வடக்கிருந்த காரணம் என்ன ?

(அ) புகழ் பெற்றதால்

(ஆ) செல்வ வளத்தால்

(இ) மக்கள் செல்வத்தால்

(ஈ) புறப் புண்பட்டதால்

(iv) சோழர்களின் தலைநகரம் எது ?

(அ) வெண்ணிப்பறந்தலை

(ஆ) உறையூர்

(இ) கடையூர்

(ஈ) தகடூர்

(v) கோப்பெருஞ்சோழனுக்கு அறிவுரை கூறிப் போரைத் தடுத்தவர் யார் ?

(அ) அமைச்சர்

(ஆ) கரிகாலன்

(இ) எயிற்றியனார்

(ஈ) வெண்ணிக்குயத்தியார்

**3.** பின்வரும் பத்தியைப் படித்து அதனை மூன்றில் ஒரு பங்காகச் சுருக்கி எழுதுக : *5×1=5*

தேனீ அதன் மூக்காலோ, வாயாலோ தான் ரீங்கரித்துக் கொண்டிருக்கிறது என்று பலரும் நினைத்துக் கொண்டிருக்கிறோம். அது உண்மையில்லை. தேனீயிடமிருந்து வரும் ரீங்கார ஓசை, அதன் இறகுகளின் மிக விரைவான துடிப்பால் தான் எற்படுகிறது. அப்படி இறகுகள் துடிப்பதன் மூலம் தான் தேனீ பறக்கிறது. அதன் இறகுகள் நொடிக்கு நானூறு முறை துடிக்கின்றன. அதிவிரைவான இந்த அசைவு காற்றில் உண்டாக்குகிற அதிர்வு நம் காதை அடையும் போது நாம் அதை ரீங்காரமாக உணர்கிறோம்.

சமூக வாழ்க்கை நடத்தும் தேனீக்களின் கூட்டில் ஒரே ஒரு இராணித் தேனீ தான் இருக்கும். அந்தக் கூட்டில் அது தான் சர்வாதிகாரி. கூட்டில் இன்னும் இரண்டு வகை தேனீக்களும் இருக்கும். கூட்டை நிலைக்கச் செய்வதற்காகப் பாடுபடும் பெண் தேனீக்கள் ஒரு வகை.

இன்னொரு வகை தேனீக்கள் சோம்பேறியான ஆண் தேனீக்கள்.

இராணித் தேனீ மற்ற தேனீக்களை விட உருவத்தில் பெரியதாக இருக்கும். வேலைக்காரிகளான பெண் தேனீக்கள் தான் தேனும் மகரந்தப்பொடியும் சேகரிக்கும். மெழுகால் கூடு கட்டுவது, கூட்டைச் சுத்தப்படுத்துவது, குஞ்சு தேனீக்களுக்கும், இராணித் தேனீக்கும் உணவு கொடுப்பது முதலான பல வேலைகளையும் பெண் தேனீக்கள் தான் செய்கின்றன.

வேலைக்காரத் தேனீக்கள் சேகரித்து வைத்த தேனைக் குடிக்கின்ற வேலையைத்தான் சோம்பேறிகளான ஆண் தேனீக்கள் செய்யும். ஆண் தேனீக்களின் உடல் அமைப்பும், தேனோ, மகரந்தமோ சேகரிப்பதற்கு ஏற்ற விதத்தில் இருக்காது. இவை எண்ணிக்கையில் குறைவாக இருக்கும். இராணித் தேனீக்களிள் மூளை, வேலைக்காரத் தேனீக்களின் மூளையை விட சிறியதாக இருக்கும்.

## பிரிவு ஆ (எழுதுதல்)

**SECTION B (Writing)** *Marks : 14*

**4.** கொடுக்கப்பட்ட தலைப்புகளுள் **ஒரு** தலைப்பில் கடிதம் ஒன்று எழுதுக : *6×1=6*

(அ) உன் வீட்டு முகவரி மாற்றம் குறித்து அஞ்சல் அலுவலகத்திற்குக் கடிதம் ஒன்று எழுதுக.

**அல்லது**

(ஆ) வெற்றிக்குத் தடையாக இருப்பவை எவை என்பது பற்றி உன் நண்பனுக்குக் கடிதம் ஒன்று எழுதுக.

(எக்கடிதமாயினும் உமது முகவரி : ச. அருண் / ச. அருணா, எண். 5, செந்தமிழ் நகர், பம்மல், சென்னை-28 எனக் கொள்க)

**5.** பின்வருவனவற்றுள் ஏதேனும் **ஒரு** பகுதியின் குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதுக : *8×1=8*

(அ) தலைப்பு — முன்னுரை — சுற்றுச்சூழல் தூய்மை — தனிமனிதத் தூய்மை — வீடு தூய்மையானால் நாடும் தூய்மையாகும் — நோய்கள் வராமல் தடுக்க அரசு முயற்சிகள் — மாசு நீக்கி தூய்மை இந்தியா காண்போம் — முடிவுரை.

CBSETAMIL

(ஆ) தலைப்பு — முன்னுரை — பாரதியின்பா நலம் — தேசிய ஈடுபாடு — புதுநெறி காட்டிய பாரதி — சமுதாய சிந்தனைகள் — தீர்க்கதரிசி — அழியாக்கவிதை — முடிவுரை.

(இ) தலைப்பு — முன்னுரை — மின்சாரம் தயாரிப்பில் பலவகை முறைகள் — என்றும் கிடைக்கும் சூரியசக்தி — புதுப்பிக்கத்தக்க எரிசக்தி — மக்களுக்கு விழிப்புணர்வு — தொழில் வளர்ச்சி - பொருளாதாரத்தில் அதன் பங்கு — முடிவுரை.

## பிரிவு இ (இலக்கணம்)

## SECTION C (Grammar) *Marks : 15*

**6.** சான்று தருக (எவையேனும் **மூன்றனுக்கு** மட்டும்) : *1×3=3*

(i) இன்னிசை அளபெடை

(அ) உறாஅர்

(ஆ) உரனசைஇ

(இ) ஓஒதல்

(ஈ) கெடுப்பதூஉம்


CBSETAMIL | www.cbsetamil.com

(ii) அன்மொழித் தொகை

(அ) முறுக்கு மீசை வந்தார்

(ஆ) மலர்க்கை

(இ) செங்காந்தள்

(ஈ) தேர்ப்பாகன்

(iii) பெயரெச்சத் தொடர்

(அ) நண்பா எழுது !

(ஆ) கேட்ட பாடல்

(இ) காற்று வீசியது

(ஈ) பாடினாள் கண்ணகி

(iv) திணை வழாநிலை

(அ) செழியன் வந்தது

(ஆ) செழியன் வந்தான்

(இ) செழியன் வந்தாள்

(ஈ) வந்தாள் செழியன்

(v) முல்லை நிலத்திற்குரிய விலங்குகள்

(அ) புலி, கரடி

(ஆ) முதலை, சுறா

(இ) எருமை, நீர்நாய்

(ஈ) முயல், மான்

**7.** கோடிட்ட இடங்களை நிரப்புக (எவையேனும் **மூன்றனுக்கு** மட்டும்) : *1×3=3*

(i) சுரமும் சுரம் சார்ந்த இடமும் ______________ .

(அ) குறிஞ்சி

(ஆ) பாலை

(இ) மருதம்

(ஈ) முல்லை

(ii) ஆநிரை கவர்தல் ___________ எனப்பட்டது.

(அ) தும்பைத்திணை

(ஆ) காஞ்சித்திணை

(இ) வெட்சித்திணை

(ஈ) வஞ்சித்திணை

(iii) செய்யுளில் இடையிடையே உயர்ந்து வருவது ______ .

(அ) துள்ளல் ஓசை

(ஆ) தூங்கல் ஓசை

(இ) அகவல் ஓசை

(ஈ) செப்பல் ஓசை

(iv) தீவகம் என்னும் சொல்லுக்கு ______ என்று பொருள்.

(அ) ஒளி

(ஆ) ஒலி

(இ) விளக்கு

(ஈ) ஓசை

(v) உயிரளபெடை ______ வகைப்படும்.

(அ) இரண்டு

(ஆ) நான்கு

(இ) மூன்று

(ஈ) ஏழு

**8.** கூறியவாறு செய்க (எவையேனும் **மூன்றனுக்கு** மட்டும்) :

*1×3=3*

(i) கெடுவான் கேடு நினைப்பான் (முதனிலை திரிந்த தொழிற்பெயரை எடுத்து எழுதுக)

(அ) கெடு

(ஆ) நினை

(இ) கேடு

(ஈ) வான்

(ii) புத்தாடை (அசை பிரித்து வாய்பாடு கூறு)

(அ) நிரை + நேர் + நேர் — புளிமாங்காய்

(ஆ) நேர் + நேர் + நேர் — தேமாங்காய்

(இ) நிரை + நிரை + நேர் — கருவிளங்காய்

(ஈ) நேர் + நிரை + நேர் — கூவிளங்காய்

(iii) பைங்கிளி (பிரித்து எழுதுக)

(அ) பசுங் + கிளி

(ஆ) பைங் + கிளி

(இ) பசுமை + கிளி

(ஈ) பசு + கிளி

(iv) மயில் கூவும் (மரபு வழாநிலை ஆக்குக)

(அ) மயில் அகவும்

(ஆ) மயில் கீக்சிடும்

(இ) மயில் பேசும்

(ஈ) மயில் கத்தும்

(v) தாமரை (இரு பெயரொட்டுப் பண்புத் தொகையாக்குக)

(அ) செந்தாமரை

(ஆ) மலர் தாமரை

(இ) தாமரை மலர்

(ஈ) நற்றாமரை

**9.** இலக்கணக் குறிப்பு தருக (எவையேனும் **மூன்றனுக்கு** மட்டும்) : *1×3=3*

(i) வாலறிவன்

(அ) தேமாங்காய்

(ஆ) புளிமாங்காய்

(இ) கூவிளங்காய்

(ஈ) கருவிளங்காய்

(ii) கண்ணகி உண்டான்

(அ) திணைவழு

(ஆ) பால்வழு

(இ) இடவழு

(ஈ) காலவழு

(iii) கொல்களிறு

(அ) பண்புத்தொகை

(ஆ) உவமைத்தொகை

(இ) வினைத்தொகை

(ஈ) உம்மைத்தொகை

(iv) வெஃஃஃகுவார்க்கில்லை

(அ) செய்யுளிசை அளபெடை

(ஆ) இன்னிசை அளபெடை

(இ) ஒற்றளபெடை

(ஈ) சொல்லிசை அளபெடை

(v) அந்தமான்

(அ) தனிமொழி

(ஆ) பொதுமொழி

(இ) தொடர்மொழி

(ஈ) எதுவுமில்லை

**10.** சரியான சொற்றொடரைத் தேர்வு செய்க
(எவையேனும் **மூன்றனுக்கு** மட்டும்) : *1×3=3*

(i) (அ) தூங்கல் ஓசை வெண்பாவுக்கு உரியது
(ஆ) தூங்கல் ஓசை ஆசிரியப்பாவுக்கு உரியது
(இ) தூங்கல் ஓசை கலிப்பாவுக்கு உரியது
(ஈ) தூங்கல் ஓசை வஞ்சிப்பாவுக்கு உரியது

(ii) (அ) நிலமும் பொழுதும் கருப்பொருள் எனப்படும்
(ஆ) நிலமும் பொழுதும் முதற்பொருள் எனப்படும்
(இ) நிலமும் பொழுதும் உரிப்பொருள் எனப்படும்
(ஈ) நிலமும் பொழுதும் கரு எனப்படும்

(iii) (அ) உடன்பட்டுக் கூறும் விடை நேர்விடை
(ஆ) உடன்பட்டுக் கூறும் விடை சுட்டுவிடை
(இ) உடன்பட்டுக் கூறும் விடை இனமொழி விடை
(ஈ) உடன்பட்டுக் கூறும் விடை உறுவது கூறல் விடை

(iv) (அ) தொகாநிலைத் தொடர் ஏழு வகைப்படும்
(ஆ) தொகாநிலைத் தொடர் பத்து வகைப்படும்
(இ) தொகாநிலைத் தொடர் எட்டு வகைப்படும்
(ஈ) தொகாநிலைத் தொடர் ஒன்பது வகைப்படும்

(v) (அ) தான் அறியாத ஒன்றை அறிந்து கொள்வதற்காக வினவுவது அறியா வினா

(ஆ) தான் அறியாத ஒன்றை அறிந்து கொள்வதற்காக வினவுவது அறிவினா

(இ) தான் அறியாத ஒன்றை அறிந்து கொள்வதற்காக வினவுவது ஐயவினா

(ஈ) தான் அறியாத ஒன்றை அறிந்து கொள்வதற்காக வினவுவது கொளல் வினா

## பிரிவு ஈ (இலக்கியம்/தமிழ்ப் பாடநூல்)

## SECTION D (Literature)

*Marks : 36*

**11.** பின்வரும் உரைநடைப் பத்தியைப் படித்து அதனைத் தொடர்ந்து வரும் வினாக்களுக்கு விடை எழுதுக : *1×5=5*

மொழி பெயர்த்தல் என்ற தொடரைத் தொல்காப்பியர் மரபியலில் குறிப்பிட்டுள்ளார்.

மாபாரதம் தமிழ்ப்படுத்தும் மதுராபுரிச் சங்கம் வைத்தும் என்னும் சின்னமனூர் செப்பேட்டுக் குறிப்பு, சங்க காலத்திலேயே தமிழில் மொழி பெயர்ப்பு மேற்கொள்ளப்பட்டதைப் புலப்படுத்துகிறது. வடமொழியில் வழங்கி வந்த இராமாயண, மகாபாரதத் தொன்மச் செய்திகள் சங்க இலக்கியங்களில் பரவலாக இடம் பெற்றுள்ளன. இதுவும் பிறமொழிக் கருத்துகளை, கதைகளைத் தமிழ்ப்படுத்தியமையைப் புலப்படுத்துகிறது. பெருங்கதை, சீவக சிந்தாமணி, கம்பராமாயணம், வில்லிபாரதம், முதலிய சில காப்பியங்களும் வடமொழிக் கதைகளை தழுவிப் படைக்கப்பட்டவையே.

மொழிபெயர்ப்பு, எல்லாக் கால கட்டங்களிலும் தேவையான ஒன்று. விடுதலைக்குப் பிறகு நாட்டின் பல பகுதிகளையும் ஒரே ஆட்சியின் கீழ் இணைக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. தேசிய உணர்வு ஊட்டுவதற்கும் ஒருமைப்பாட்டை ஏற்படுத்துவதற்கும் இந்திய அரசு, மொழி பெயர்ப்பை ஒரு கருவியாகக் கொண்டது. ஒரு மொழியில் இருக்கும் நூல்களைப் பிற மொழியில் மொழி பெயர்த்தது; பல்வேறு மாநிலங்களில் இருந்த, இருக்கின்ற எழுத்தாளர்கள், சிந்தனையாளர்கள் ஆகியோரைப் பற்றிய நூல்களையும் வெளியிட்டது. இத்தகைய மொழிபெயர்ப்பு முயற்சிகள் சாகித்திய அகாதெமி தேசிய புத்தக நிறுவனம், தென்னிந்தியப் புத்தக நிறுவனம் ஆகியவற்றின் மூலம் செய்யப்பட்டன.

**வினாக்கள் :**

(i) தொல்காப்பியர் மரபியலில் குறிப்பிட்டுள்ள தொடர் எது ?

(ii) சங்க இலக்கியத்தில் எச்செய்திகள் பரவலாக இடம் பெற்றுள்ளன ?

(iii) வடமொழிக் கதைகளைத் தழுவி படைக்கப்பட்ட காப்பியங்களைக் குறிப்பிடுக.

(iv) இந்திய அரசு மொழிபெயர்ப்பை ஒரு கருவியாகக் கொண்டது ஏன் ?

(v) இப்பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனங்களின் பெயர்களை எழுதுக.

**12.** பின்வரும் செய்யுள் பகுதியைப் படித்து அதன் அடியிற் காணும் வினாக்களுக்கு விடையளி : *1×4=4*

“நும்இல் போல நில்லாது புக்கு,
கிழவிர் போலக் கேளாது கெழீஇ
சேட் புலம்பு அகல இனிய கூறி
பரூஉக்குறை பொழிந்த நெய்க்கண் வேவையொடு
குரூஉக்கண் இறடிப் பொம்மல் பெறுகுவீர் !”

**வினாக்கள் :**

(i) இப்பாடல் இடம் பெற்றுள்ள செய்யுளின் பெயர் என்ன ?

(அ) தமிழ்விடு தூது

(ஆ) மலைபடுகடாம்

(இ) காசிக்காண்டம்

(ஈ) நந்திக்கலம்பகம்

(ii) இந்நூலின் ஆசிரியர் யார் ?

(அ) சாத்தனார்

(ஆ) ஒட்டக்கூத்தர்

(இ) பெருங்கௌசிகனார்

(ஈ) சேக்கிழார்

(iii) வேவை என்ற சொல்லின் பொருள் என்ன ?

(அ) வெதும்பியது

(ஆ) மலர்ந்தது

(இ) வெந்தது

(ஈ) உலர்ந்தது

(iv) இச்செய்யுள் எந்த மன்னனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு பாடப்பட்டது ?

(அ) பாரி

(ஆ) பேகன்

(இ) நன்னன்

(ஈ) ஆய்

**13.** பின்வரும் குறட்பாக்களைச் சரியான சீர்களால் நிரப்புக : *1×2=2*

(i) அருமை __________ றசாவாமை வேண்டும்
பெருமை ________ தரும்.

(ii) குற்றம் இலனாய்க் ___________ வாழ்வானைச்
சுற்றமாச் __________ உலகு.

**14.** பின்வரும் செய்யுள் வினாக்களுள் எவையேனும் **இரண்டனுக்கு** மட்டும் விடை தருக : *4×2=8*

(i) தமிழன்னையை வாழ்த்துவதற்கான காரணங்களாகப் பாவலரேறு சுட்டுவன யாவை ?

(ii) முல்லைப் பாட்டில் உள்ள கார்காலச் செய்திகளை விவரித்து எழுதுக.

(iii) செங்கீரை ஆடிடக் குகனைக் குமரகுருபரர் அழைக்கும் முறையை விவரி.

(iv) சித்தாளின் மனச்சுமை அறிந்து நாகூர்ரூமி உரைப்பன யாவை ?

**15.** பின்வரும் உரைநடை வினாக்களுள் எவையேனும் **இரண்டனுக்கு** மட்டும் விடை தருக : *5×2=10*

(i) தாவரங்களின் அடிப்பகுதி மற்றும் கிளைப் பிரிவுகளுக்குத் தமிழில் உள்ள சொல் வளத்தை எழுதுக.

(ii) ஏழ்மையிலும் விருந்தோம்பிய தமிழர் பண்பாட்டை விவரி.

(iii) தற்காலத்தில் வளர்ந்துள்ள மின்னணுப் புரட்சியைக் குறித்து விளக்குக.

(iv) ம.பொ.சி. அவர்கள் ஆறு மாதக் கடுங்காவல் தண்டனை பெற்ற நிகழ்வை விவரி.

(v) 'இன்றைய அறிவியல் கண்டுபிடிப்புகள் மனிதனை மேம்படுத்துகின்றனவா ?' என்பது குறித்த உன் எண்ணங்களை எழுதுக.

**16.** பின்வரும் தலைப்புகளில் ஏதேனும் **ஒன்றைக்** குறித்துத் துணைப்பாடக் கட்டுரை எழுதுக : *7×1=7*

(i) 'கோபல்ல புரத்து மக்கள்' காட்டிய மனித நேயம்.

(ii) 'பாய்ச்சல்' சிறுகதைச் சுருக்கம்.

(iii) 'விண்ணைத் தாண்டிய தன்னம்பிக்கை' தரும் பாடம்.